Registerd as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

Chundikuli Branch Library

YMCA

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 6 [20-06-93] ஞாயிற்றுக்கிழமை ஓசை 122

## யாழ். பல்கலைக் கழகத்திற்கு ஜெனரேற்றர்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்திற்கு 7 மின் பிறப்பாக்கிகளும் மூன்றாண்டு காலமாக கொழும்பு களஞ்சிய அறையில் தேங்கிக் கிடந்த இரசாயனப் பொருள்களும் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் ஆய்வுகூட உபகரணங்கள் என்பனவும் குமண மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது. மேற்படி மின் பிறப்பாக்கிகளில் இரண்டு 27.5 கிலோ வாற்று மின்னையும் மற்ற ஐந்து மின்பிறப்பாக்கிகளும் 2கிலோவாற்று மின்னையும் பிறப்பிக்கவல்லன. இவற்றுடன் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும் மற்றும் இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள் ஆகியவையும் குமண கப்பலில் இருந்து நேற்று இறக்கப்பட்டு யாழ். பல்கலைக்கழகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

# பொருளாதாரத் தடையை நீக்கிவிடுமாறு

# அரசிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை

## கைதிகளை விடுவிக்க நிபந்தனை

[யாழ்ப்பாணம்]

அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடையை நீக்கி, தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்ட பொருளாதாரப் பளுவை அகற்றிவிட அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் சாகும்வரை உண்ணா விரதம் இருந்துவரும் போர்க் கைதிகளை தாம் விடுவிக்க தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது. கொழும்பிலிருந்து ஜனாதிபதியின் தூதுவராக யாழ். வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் புலிகள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

போர்க் கைதிகளின் விடுதலை தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதியின் தூதுவராக யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் ஆனந்த விஜயசேகராவிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று இரு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தை காலை 10.00 மணியிலிருந்து 12.00 மணி வரையிலும், மாலைப் பேச்சுவார்த்தை 4.00—5.00 மணி வரையிலும் இடம் பெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகளின் தரப்பில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோரும் அரசாங்க தரப்பில் பிரிகேடியர் ஆனந்தவிஜய சேகராவும் பங்கு பற்றினர்.

சிறிலங்கா இராணுவத்தினரின் காவலில் உள்ள விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பெயர்ப் பட்டியலை அரசாங்கம் தர மறுத்ததைத் தொடர்ந்து, தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை நீக்கிவிடுமாறு புதிய நிபந்தனை ஒன்றை புலிகள் முன் வைத்தனர்.

இது குறித்து அரசாங்கம் சாதகமாகப் பரிசீலித்து நல்ல முடிவு எடுத்தால் தமது காவலிலுள்ள கைதிகளை விடுதலை செய்து விடுவதாகவும் விடுதலைப் புலிகள் உறுதியளித்தனர்.

மேலும் பொருளாதாரத் தடை காரணமாக தமிழ் மக்

[4ஆம் பக்கம் பார்க்க]



சிறிலங்கா ஜனாதிபதியின் ஆணை பெற்ற தூதராக நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியா ஆனந்த வீரசேகரா, தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி ஆகியோரால் அழைத்துச் செல்லப்படுவதை மேலுள்ள படத்திற் காணலாம்

## கூட்டுப்படைத் தலைமையகம் பரிசீலித்து முடிவு எடுக்கும்

(யாழ்ப்பாணம்)

போர்க்கைதிகளை விடுதலை செய்வதற்கு பொருளாதார தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனையை கூட்டுப்படை தலைமையகமே பரிசீலித்து முடிவு எடுக்கும் என அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா ஜனாதிபதியின் ஆணை பெற்ற தூதுவராக யாழ். வந்துள்ள பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா புலிகளுடனான 2ஆம் சுற்று பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்தார்.

போர் கைதிகள் விடுதலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திய பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் பொருளாதாரத் தடையை நீக்குமாறு விடுதலைப்புலிகள் கோரியதற்கு பதிலளிக்கும் முகமாகவே இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக அறியவருகின்றது.

மேலும், பொருளாதாரத் தடை உடன் நீக்குவது சாத்திய மாகாது எனவும், ...

### மன்னார் மாவட்டத்தில்

# 10 தமிழ் பொதுமக்கள்



சுதுமலையில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில் நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா, தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோரால் அழைத்துச் செல்லப்படுவதை மேலுள்ள படத்திற் காணலாம்

### மன்னார் மாவட்டத்தில்

# 10 தமிழ் பொதுமக்கள் இராணுவத்தால் கைது

(மன்னார்)

மன்னார் நானாட்டான் இராணுவமுகாமிலிருந்து கடந்த வியாழன் காலை பவள் கவசவாகனங்கள்சகிதம் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் அரிப்பு கரையோர கிராமம் நோக்கி முன்னேறி அக்கிராமத்தில் நிலைகொண்டுள்ளனர்.

மேலும் நேற்று முன்தினம் காலை அரிப்பிற்கு அருகாமையில் உள்ள பூரக் கிராமத்திற்கு படகு மூலம் வந்திறங்கிய சிறிலங்கா இராணுவத்தினர் அக்கிராமத்தில் இருந்த பொதுமக்களைக் கைதுசெய்து அரிப்பிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

10 பொதுமக்கள் இவ்வாறு கைது செய்து கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## வீரச்சாவு



### லெப். வாணி

மட்டக்களப்பு பெண்டுகள் சேனை தட்டாவெளியில் கடந்த ஒன்பதாம்திகதி காலை 6மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் லெப்டினன்ட் வாணி (சண்முகம்தங்கராஜா, சித்தாண்டி மொறக் கொட்டாஞ்சேனை மட்டக்களப்பு) எனும் விடுதலைப்புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## நான்கு தமிழ் இளைஞர் கொட்டாஞ்சேனையில் கைது

(கொழும்பு)

புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் நீர் கொழும்புப் பொலிஸ் நான்கு தமிழ் இளைஞர்களைக் கொட்டாஞ்சேனையில் கைது செய்துள்ளது.

கொட்டாஞ்சேனையில் ஜூன் 7ஆம் திகதி கைது செய்யப்பட்ட நால்வரும்அச்சுவேலியையும், யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவர்கள் என்றுபொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபர்கள் விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக கொழும்பு நகருக்குள் ஊடுருவிய குழுவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

அதேவேளை, மேலும் ஆறு சந்தேக நபர்கள் நீர்கொழும்பில் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் செய்திகள் தெரிவிக்கின்றன பாதுகாப்புக் காரணங்களுக்காக இவர்களை பற்றிய மேலதிக விபரங்களைத் தாம் வெளியிட விரும்பவில்லை எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## தமிழ் இளைஞர் ஒருவர் காவலில் தற்கொலை

(கொழும்பு)

தமிழ் இளைஞர் ஒருவர் விசாரணையின் போது தற்கொலை செய்து கொண்டதாக சிலாபம் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிலாபத்தில் தங்கியிருந்த இவர் பருத்தித்துறையை சேர்ந்த கணபதிப்பிள்ளை சிறிமோகன் எனப் பொலிசார் தெரிவிக்கின்றார்கள் சிறிமோகன் வசமிருந்த இரண்டு சயனைட் குப்பிகளைப் பறிமுதல் செய்த பிறகு, மறைத்து வைத்திருந்த மூன்றாவது சயனைட் குப்பியை உட்கொண்டு இவர் தற்கொலை செய்து கொண்டாராம்.

சிறிமோகனுக்கு இருப்பிடம் வழங்கிய பளையைச் சேர்ந்த யோசப் பவளம் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது சிறிமோகன் இந்தப் பெண்ணின் உறவினர் என்றும், இவர்களுக்கு உறவினர் வத்தளையில் இருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது. வத்தளை உறவினரும் விசாரிக்கப்படுகின்றனர்.

### கிளாலி - பூநகரி
## படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் ஆனந்த விஜயசேகராவிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று இரு சுற்றுப்பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன முதலாம சுற்றுப் பேச்சுவார்த்தைகாலை 10.00 மணியிலிருந்து 12.00 மணி வரையிலும், மாலைப் பேச்சுவார்த்தை 4.00—5.00 மணி வரையிலும் இடம் பெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகளின் தரப்பில் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோரும் அரசாங்க தரப்பில் பிரிகேடியர் ஆனந்தவிஜயசேகராவும் பங்கு பற்றினர்.

சிறிலங்கா இராணுவத்தினர் போல் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பெயர்ப் பட்டியலை அரசாங்கம் தர மறுத்ததைத் தொடர்ந்து, தமிழ் மக்கள் மீது திணிக்கப் ... நிபந்தனை ஒன்றை புலிகள் முன் வைத்தனர்

இது குறித்து அரசாங்கம் சாதகமாகப் பரிசீலித்து நல்ல முடிவு எடுத்தால் தமது காவ ... தலைப் புலிகள் உறுதியளித்தனர்.

மேலும் பொருளாதாரத் தடை காரணமாக தமிழ் மக்

[4ஆம் பக்கம் பார்க்க]

# கூட்டுப்படைத் தலைமையகம் பரிசீலித்து முடிவு எடுக்கும்

(யாழ்ப்பாணம்)

போர்க்கைதிகளை விடுதலை செய்வதற்கு பொருளாதார தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனையை கூட்டுப்படை தலைமையகமே பரிசீலித்து முடிவு எடுக்கும் என அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா ஜனாதிபதியின் ஆணை பெற்ற தூதுவராக யாழ். வந்துள்ள பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா புலிகளுடனான 2ஆம் சுற்று பேச்சுவார்த்தைகளின் போது தெரிவித்தார்.

போர் கைதிகள் விடுதலை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திய பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் பொருளாதாரத் தடையை நீக்குமாறு விடுதலைப்புலிகள் கோரியதற்கு பதிலளிக்கும்முகமாகவே இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக அறியவருகின்றது.

மேலும், பொருளாதாரத் தடை உடன் நீக்குவது சாத்தியமாகாது எனவும், அதற்குக் காலதாமதம் ஆகலாம் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# கைதிகள் பரிமாற்றத்திற்கென முன்னரும் வந்திருந்தேன்
### - பிரிகேடியர் வீரசேகரா

(நெல்லியடி)

''கைதிகள் பரிமாற்றத்திற்காக நான் முன்னொருதடவை இங்கு வந்திருந்தேன் அது ஞாபகம் இருக்கிறதா?''

இவ்வாறு குமண கப்பல் மூலம் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த சிறிலங்கா ஜனாதிபதியின் ஆணை பெற்ற தூதர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா அங்கு நடைபெற்ற வரவேற்பின்போது குறிப்பிட்டார்.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறைக்கு குமண கப்பல் மூலம் வந்தடைந்தபிரிகேடியர்ஆனந்தவீரசேகராவுடன் யாழ் மாவட்ட அரசாங்கஅதிபர் கே.மாணிக்கவாசகரும் வந்திருந்தார்.

இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க கொடி பறக்க விடப்பட்ட இயந்திரப் படகு மூலம் காலை 8 30 மணியளவில் இறங்குதுறையை வந்தடைந்தனர். இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பியாட் சுவீட்சர் அழைத்து வந்தார்.

இவர்களின் வருகையையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகளினால் துறைமுகப் பகுதியில் பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட தளபதி திரு. அன்பு, யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் வரவேற்றனர் அருகில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் பலரும் காணப்பட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கலிபர் தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகரில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். (41)

### யுத்த கைதிகளின் உறவினர்கள்

# மேலும் சில தினங்கள் தங்க தலைவர் பிரபா அனுமதி

யுத்தக் கைதிகளின் உறவினர்கள் மேலும் சில தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அனுமதி வழங்கியுள்ளார் என்று யுத்தக்கைதிகளைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். அரசுடன் பேசி கைதிகளை விடுவிப்பதற்கு வசதியாகவே இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சிங்கள யுத்தக் கைதிகளின் உண்ணாவிரதப்போராட்டம் நேற்று 7ஆவது நாளாகத் தொடர்ந்தது.

இந்த யுத்தக்கைதிகளையும் இவர்களது உறவினர்களையும் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.கரிகாலன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள். உறவினர்கள் மத்தியில் திரு. அன்ரன் பாலசிங்கம் உரை நிகழ்த்தினார். இப்பேச்சுக்களின்போது யாழ்ப்பாணத்தில் மக்கள் படும் துயரங்கள் குறித்தும் எடுத்து விளக்கினார்.

யுத்தக்கைதிகளை விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அரசினால் தடுத்து வைத்திருக்கும் கைதிகளின் பட்டியலை வழங்கி அவர்களைப் பரிமாறிக் கொள்வது அல்லது பொருளாதாரத் தடையை நீக்குவது என்ற கோரிக்கையை பிரிகேடியர் வீரசேகராவிடம் முன்வைக்கப் போவதாக திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசின் தூதுவர் யுத்தக்கைதிகள் சந்திப்பு

அரசின் தூதுவராக நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் திரு வீரசேகரா உண்ணாவிரதமிருக்கும் சிங்கள யுத்தக் கைதிகளைச் சந்தித்துள்ளார்.

நேற்றுமாலை 4.00மணியளவில் கைதிகளைச் சந்தித்த பிரிகேடியர் கைதிகளுடனும், கைதிகளின் உறவினர்களுடனும் உரையாடினார்.

## பிரிகேடியர் இன்று கொழும்பு திரும்புகிறார்

புலிகளின் காவலிலுள்ள போர்க் கைதிகள் விடுதலை தொடர்பாகபேச்சுவார்த்தை நடத்துவதற்கு நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரிகேடியர் ஆனந்த விஜயசேகரா இன்று காலைபருத்தித்துறை ஊடாக கொழும்பு திரும்பவுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் இரு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய விஜயசேகரா; பேச்சுவார்த்தைகள் பற்றி அரசாங்கத்திற்கு விளக்கிக் கூறும் பொருட்டே உடனடியாகக் கொழும்பு திரும்பவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## வரி விளம்பரம்

**உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்**

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஒட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6733)

**விற்பனை முகவர் தேவை**

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கரவண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல்பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (சி-6862)

**தேவை**

ஸ்ருடியோ வேலைகள் பழகிய - பழக விரும்பும் பெண் பாலார் (அண்மையிலுள்ளோர்) விண்ணப்பிக்கவும் ஸ்ருடியோ நித்ய சித்ரா - சங்கானை. (5181)

**விற்பனைக்கு**

நல்ல இன கோழிக்குஞ்சுகள் (இரண்டுகிழமை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- காந்தன், சிறீ கடை அருகாமை தபால் கட்டைச் சந்தி, அரியாலை. (5185)

---

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

**பதவி வெற்றிடம்**

**உதவி விரிவுரையாளர்**

தகைமைகள் :-

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாய பட்டதாரி (B. Sc. Agri.) ஆக இருப்பதுடன் இரண்டு வருட தொழில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் ஒரு வருடம் விவசாய பாடநெறியை கற்பித்த அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர் வரணி மிசன் பண்ணையில் 3 மாத காலம் தங்கியிருந்து பயிற்சியளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

சம்பளம் — நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
வயது — 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

விரும்புவோர் விண்ணப்பக்கடிதத்தையும் தகைமைக் குறிப்பையும் கீழ்க்காணும் விலாசத்திற்கு 30-6-93 க்கு முன் அனுப்பிவைக்கவும்.

மருதனார்மடம்
சுன்னாகம்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்.

(5179)

---

## கொழும்பு ஸ்ருடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (BLOCKS) - பழைய படங்களிலிருந்து - அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல் - ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6748)

---

# சிராவஸ்திக்கு கடும் பாதுகாப்பு

### சபாநாயகர் உத்தரவு

(கொழும்பு)

கொழும்பில் எம். பிகள் தங்கியிருக்கும் சிராவஸ்திக்குகடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது இதற்கான உத்தரவை பொலிசாருக்கு சபாநாயகர் எம். எச் முகமட் பிறப்பித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் பாதுகாப்பு சூழ்நிலையை மனதிற்கொண்டு சிராவஸ்தியில் பாதுகாப்பைபலப்படுத்துமாறு தமக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டதாகவும் சிராவஸ்திக்குள் அனுமதியில்லாத நபர்கள் பிரவேசிப்பதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் குறித்து எம். பிகள் சிலர் தம்மிடம் அண்மையில் முறையிட்டனர் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

சிராவஸ்தியில் எம். பிமார்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட சுமார் 55பேர் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

வற்றாத வளம் சூழ்ந்த வன்னியிலே இருந்து வந்திருக்கும்

## "மாட்டிறைச்சி வற்றல்"

தரமான இறைச்சியிலே தயாரித்த வற்றல்!
சாதாரண இறைச்சியிலே சகலதும் கலந்திருக்கும்!
இந்த வற்றலிலோ, இறைச்சியே தனித்திருக்கும்,
நான்கு கிலோ இறைச்சியில்
ஒரு கிலோ வற்றல் பெறப்படுகின்றது.
மலிவான விலையினிலே சுவையான இறைச்சி வற்றல்!

ஒரு கிலோ வற்றல் 160/- மட்டுமே.
மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்கலாம்.

தொடர்புகளிற்கு:-

(01) உதயம் பல்பொருள் அங்காடி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(02) மொத்த விற்பனை நிலையம்,
கொக்குவில்.

(சி-6866)

---

## ஹோட்டல் ஞானம்ஸ்

**மீண்டும் புதிய மெருகுடன் சேவையாற்றுகின்றோம்**

- ★ அன்பான உபசரிப்பு
- ★ உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கு பல வசதிகள் நிறைந்த அறைகள்.
- ★ குளிர் பானங்கள்.
- ★ உள்ளூரில் தயாரித்த மதுபானங்கள்.
- ★ குளிர் பியர், ஸ்ரவுட் மதுபானங்கள்.
- ★ சுவையான தரமான உணவு வகைகள் (Eastern & Western).
- ★ உணவு பார்சல்கள் (Buriyani, Fried rice, Noodles) ஆகியவை முன் கூட்டியே ஓடர்களுக்கு வழங்கப்படும்.

---

# முகவர்களால் ஏமாற்றப்பட்ட 80பேர் சிங்கப்பூரில் பரிதவிப்பு

(கொழும்பு)

மூன்று வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்ட சுமார் எண்பது இலங்கையர்கள் சிங்கப்பூரில் தத்தளிப்பதாக கூறப்படுகின்றது.

சிங்கப்பூர் அதிகாரிகளால் இந்த எண்பது இலங்கையரும் முற்றுகையிடப்பட்டு சட்டவிரோத குடிவரவு குற்றம் சுமத்தப்பட்டபோது இம்மூன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களும் தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகின்றது

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் இந்த மூன்று முகவர்களும் இத்தொழிலுக்கு புதியவர்கள் என்றும் இவர்கள் தொடர்பாக பணியகம் மிகக்குறைந்த அளவிற்கே அறிந்திருப்பதாகவும் தெரிவித்தது.

இதேவேளை வெளிவிவகார அமைச்சின் ஊடாக ஏமாற்றப்பட்ட எண்பது இலங்கையர்களை மீண்டும் அழைத்து வர முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கூறியுள்ளது.

---

## வீரவணக்கக்கூட்டம்

(அரியாலை)

6-ஆம் மாதங்களில் [ஜூன் மாதம்] வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டத்தின் சண்டிலிப்பாய் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு8 00 மணிக்கு, மானிப்பாய் விநாயகர் கோவில் முன்றலில் நடைபெறும்.

வீரவணக்கக்கூட்டத்தைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [90]

---

# சிசு கொலை தொடர்பாக இளம் பெண் ஒருவர் கைது

தான் பெற்ற சிசுவை தோட்டத்தில் வீசிய இளம் பெண் ஒருவரை சுன்னாகம் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த 13ஆம் திகதி நீர்வேலி மேற்கு போயிட்டி பகுதியில் உள்ள தோட்ட மொன்றினுள் அழுகிய நிலையில் இருந்து மீட்கப்பட்ட சிசுவின் சடலம் தொடர்பான விசாரணையின் போதே மேற்படி பெண் கைது செய்யப்பட்டதாகவும் இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாகவும் சுன்னாகம் காவல்துறையினர் தெரிவித்தனர். இதே வேளை இப்பெண் திருமணமாகாதவர் என்பதும் தெரிய வந்துள்ளது.

இது இவ்வாறிருக்க ஊரெழுவில் மீட்கப்பட்ட சிசுவின் சடலம் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணை நடைபெற்று வருகின்றதெனவும் இது தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் காவல் துறையினர் தெரிவித்தனர்.

கடந்த 13ஆம் திகதி நீர்வேலி போயிட்டி பகுதியிலும் ஊரெழுப்பகுதியிலும் உள்ள தோட்டங்களில் அழுகியநிலையில் இருந்த இரு சிசுக்களின் உடல்களை சுன்னாகம் காவல் துறையினர் மீட்டனர் என செய்தி வெளிவந்தது தெரிந்ததே.

---

## அதிகாரி விஜயம்

யாழ் மாவட்ட ஐக்கிய சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பதிகாரி திரு. ஜோன் குடான் கடந்த திங்களன்று மந்திகை மருத்துவமனைக்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் வைத்திய சாலையில் நிலவும் குறைபாடுகள், தட்டுப்பாடுகள், வாட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளின் நலன்களையும் கேட்டறிந்ததுடன், பௌதிக சிகிச்சைப் பிரிவில் உள்ள உபகரணங்களின் பற்றாக் குறையையும் அறிந்து சென்றார். (30)

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-06-20

1987ஆம் ஆண்டு இதேதினம் பூசாமுகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழிளைஞர்கள்.

உடுவிலில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன், மற்றும் பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஏழாலை-குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சம

---

# JAFFNA ENGLISH ACADEMY

LUXINTENEBRIS

**SPOKEN ENGLISH**

The learners will be taught to cope with informing, describing, narrating instructing, eliciting, expressing, reporting, expanding, developing, clarifying, rephras, ing et cetera. These situations cover the common demands of everyday life so that they can handle oral interaction with adequate confidence.

There are two versions of our courses - one aimed at young people and adult-s and one for young learners between about 9 and 13 years of age.

Duration: 4 Months.

JUNIOR BATCH - (Between 9 and 13 years of age)
Weekends - 3 to 4.30 p. m. Commencement: 4 - 7 - 93

நல்ல இன கோழிக்குஞ்சுகள் (இரண்டுகிழமை)விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- காந்தன், சிறீ கடை அருகாமை தபால் கட்டைச் சந்தி, அரியாலை.
(5185)

55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/6748)


# JAFFNA ENGLISH ACADEMY

LUXINTENEBRIS

**SPOKEN ENGLISH**

The learners will be taught to cope with informing, describing, narrating instructing, eliciting, expressing, reporting, expanding, developing, clarifying, rephras, ing et cetera. These situati ns cover the common demands of everyday life so that they can handle oral interaction with adequate confidence.

There are two versions of our courses - one aimed at young people and adult-s and one for young learners between about 9 and 13 years of age.

Duration: 4 Months.

JUNIOR BATCH - (Between 9 and 13 years of age)
Weekends - 3 to 4.30 p. m. Commencement: 4 - 7 - 93

SENIOR BATCH - (Adults)
Weekends - 4 - 30 to 6 p. m. Commencement: 4 - 7 - 93,
Mondays/Wednesdays - 4 - 30 to 6 p.m. Commencement: 5 - 7 - 93

Lectures: By a panel of suitably qualified & experienced teachers of English.

**ELOCUTION**

Aimed at training the students to provide excellent practice in distinct articulation.
Duration: 3 Months
Weekends : 8 to 9 a. m. Commencement: 4 - 7 - 1993

**NATIONAL CERTIFICATE IN ENGLISH** (N C E JULY 93 Examination)
Weekend classes : 3 to 4 - 30 p. m. Commencement : 19 - 6 - 1993
Lectures : KANDIAH NAVARENDRAN

**ENGLISH FOR SPEAKERS OF OTHER LANGUAGES (E S O L)**

English Language is taught right from the begining to acheieve high proficiency in written English.
Weekends : 1 to 2 - 30 p. m. Commencement : 4 - 7 - 93.
Lectures : KANDIAH NAVARENDRAN

**TEST OF ENGLISH AS A FOREIGN LANGUAGE (TOEFL)**

The syllabus is designed to evaluate the English proficiency of persons whose native language is not English.
Weekend Batch - 8 to 10 a. m,
Tuesday/Friday Batch - 4 - 30 to 6 p. m. Commencement : 2 - 7 - 93
Lectures : KANDIAH NAVARENDRAN.

**ENGLISH AND BUSINESS COMMUNICATIONS**

Ideal for those studying at school or college or university before entering employment and for those acquiring or updating skills in employment, after a break in employment or when seeking a career change. The syllabus comprises the communication process, lines of communication, oral presentation, delivery, using visual aids, interview, communication barriers, written communication, graphic communication, group discussion, briefing sessions, public relations, social aspects of communications, mass media communications, customer relations et cetera.
Duration : 6 Months. Tuesdays/Fridays - 3 to 4 - 30 p. m.
Lectures : KANDIAH NAVARENDRAN

**HIGHER ENGLISH COURSE**

The syllabuses are not intended to be exhaustive. The G. C. E. (Advanced Level) will also be covered. An ideal course for those who desire to acquire updating skills in English Language & Literature.
Duration : One year.
Weekends : 4 - 00 to 6 . 00 p. m. Commencement : 4 - 7 - 93.
Lectures : KANDIAH NAVARENDRAN.

9 RAKKA LANE,
CHUNDIKULI, JAFFNA.
(சி-6843)


(சி-6866)

# ஹோட்டல் ஞானம்ஸ்

## மீண்டும் புதிய மெருகுடன் சேவையாற்றுகின்றோம்

★ அன்பான உபசரிப்பு
★ உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் தங்குவதற்கு பல வசதிகள் நிறைந்த அறைகள்.
★ குளிர் பானங்கள்.
★ உள்ளூரில் தயாரித்த மதுபானங்கள்.
★ குளிர் பியர், ஸ்ரவுட் மதுபானங்கள்.
★ சுவையான தரமான உணவு வகைகள் (Eastern & Western).
★ உணவு பார்சல்கள்(Buriyani, Fried rice, Noodles) ஆகியவை முன் கூட்டியே ஓடர்களுக்கு வழங்கப்படும்.
★ திருமணம், பிரியாவிடை, மற்றும் மங்கள விருந்துபசாரங்கள் செய்வதற்கான மண்டப வசதி.

எதுவானாலும் உங்கள் விருப்பத்தை உங்கள் திருப்திக்கேற்ப பூர்த்திசெய்ய விஜயம் செய்யுங்கள்.

ஹோட்டல் ஞானம்ஸ்,
299, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6860)

உ
திருவருள் துணை

# 6-ம் வருட நினைவஞ்சலி

மலர்வு
19♭7-10-01

உதிர்வு
1987-06-20

திதி: 1993-07-14



திருமதி
## ஆச்சிக்குட்டி சின்னத்தம்பி

(1948 - 12 - 05இல் சிவபதமடைந்த இருபாலையூர் சுதேச வைத்தியர் வல்லிபுரம் சின்னத்தம்பியின் பிரியபத்தினி)

மண்ணுலகதனிலெம்மை மகிழ்வொடு வாழவைத்து
எண்ணிய யாவுந்தந்து இன்புறப் பணிகளாற்றிக்
கண்ணெனக் காத்தாயே! கற்பகத்தருவே! யம்மா
விண்ணுலகதனிற் சென்று விருப்பொடு வாழ்கின்றாயோ

நம் தெய்வத்தாயின் ஆத்ம சாந்திக்காக
நிதம் நிதம் நிமலனடி தொழுதெழுகின்றோம்.

யாழ். வீதி,
காங்கேசன்துறை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(5160)

வந்துள்ளது.

இது இவ்வாறிருக்க ஊரெழுவில் மீட்கப்பட்ட சிசுவின் சடலம் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணை நடைபெற்று வருகின்றதெனவும் இது தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் காவல் துறை

இவர் வைத்திய சாலையில் நிலவும் குறைபாடுகள், தட்டுப்பாடுகள், வாட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளின் நலன்களையும் கேட்டறிந்ததுடன், பௌதிக சிகிச்சைப் பிரிவில் உள்ள உபகரணங்களின் பற்றாக் குறையையும் அறிந்து சென்றார். (30)

# நினைவு கூருகின்றோம் ...
# 1993-06-20

1987ஆம் ஆண்டு இதேதினம் பூசாமுகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழிளைஞர்கள்.

உடுவிலில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன், மற்றும் பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஏழாலை-குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

வரதப்பா (வைத்திலிங்கம் கணேசலிங்கம்-தண்ணீரூற்று. முள்ளியவளை-முல்லைத்தீவு)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில் வட்டுவெளியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன், மற்றும் காரைதீவு, இடம்பெயர்ந்தோர் முகாமினுள் நுழைந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லபபட்ட 06 தமிழர்கள்,

திருமலை-சீனன்குடாப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 16 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

லெப்.சலீம் (குமாரசிங்கம் ரவிச்சந்திரன்-சந்தை வீதி, கிரான்-மட்டு)

2-ம் லெப்.காமன் (பொன்னையா காசிநாதன்-கிண்ணியடி, வாழைச்சேனை-மட்டு)

செல்வா (பொன்னம்பலம் விஜயன்-மாங்கேணி-மட்டு)

கப்டன் சுபாஸ் (அன்ரனிப்போல் கென்றி சில்வெஸ்ரர் ஆனந்தன்-சிப்பித்திடல், தம்பலகமம்-திருமலை)

அண்ணாத்துரை (ஐயம்பிள்ளை தவராசா-தம்பலகமம்-திருமலை)

சமர்களத்தில் முதன் முதலில் வீரச்சாவெய்திய துணைப்படைவீரர்:

லெப்.பொன்னம்பலம் ( — பொன்னம்பலம்-மணலாறு)

2-ம் லெப்.சின்னப்பா/ரவிக்காந்த் (கனகராசா பிரபானந்தன்—சசிக்குமார் வீதி,-கோண்டாவில் மேற்கு-யாழ்)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

இந்திரன் (அருளானந்தம் பரமானந்தம்-பாலமுனை, மண்டூர்-மட்டு)

தமிழீழக் கடற்பரப்பில் (திருமலை தோப்பூர்) தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதுசிறிலங்காகடற் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழ்க் கடற் தொழிலாளர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6864)

### சிந்தனைக்கு

அதிர்ஷ்டம் உனக்கு சட்டியைத் தேடித் தரலாம். ஆனால், சட்டியில் உலையைப் போடுவது உன் உழைப்பைப் பொறுத்ததே.

- ஜான் கே

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## கைதிகள் குறித்து திடீர் அக்கறை

"எங்களது பிள்ளைகளை மீட்க இந்த அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. மூன்று வருடங்களாகியும் எங்கள் பிள்ளைகள் எங்கே இருக்கின்றார்கள் என்று கூடத் தெரிவிக்கத் தவறிவிட்டது."

"எமது பிள்ளைகள் எங்கே இருக்கின்றார்கள் என்று அறிய அரசாங்கத் தலைவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளிடம் பல தடவை சென்று கேட்ட போதிலும், அவர்கள் பதில் ஏதும் தரவில்லை. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவோ, புதிய ஜனாதிபதி விஜயதுங்காவோ இந்த விடயத்தில் மௌனமாக இருந்து விட்டார்கள்."

"தெற்கில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் மேடைப் பேச்சுக்களை மட்டுமே நடத்துகின்றன. மேடையில் இருந்து இறங்கினால் அது பற்றி எதுவுமே செய்வதில்லை. நாம் பலத்த சிரமங்களின் மத்தியிலும் கொழும்பு சென்று எமது சகோதரர்களின் விடுதலை தொடர்பாக அரசியல்வாதிகளைச் சந்திக்க முற்பட்டால் அவர்கள் கதவுகள் மூடப்படுகின்றன."

இதுபோன்று தமது பல்வேறு உள்ளக் குமுறல்களை நேற்று முன்தினம் யாழ். வந்து சேர்ந்த புலிகளின் காவலிலுள்ள யுத்தக் கைதிகளின் பெற்றோர் / உறவினர்கள் வெளியிட்டனர். தாம் மூன்று வருடமாக தமது பிள்ளைகளின் / உறவினர்களின் விடுதலைக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளை அரசாங்கமும், அரசியல்வாதிகளும் பாராமுகமாக இருந்ததையிட்டு கைதிகளின் சகல உறவினர்களும் குமுறும் நெஞ்சத்துடன் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் திடீரென சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் ஆணை பெற்ற தூதுவராக புனர்வாழ்வு ஆளுநர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா புலிகளுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் வரவுள்ளதான அறிவிப்பு வெளியானது. அதுவும், கைதிகளின் பெற்றோர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போதே, மிகக் குறுகியகால அறிவிப்பில் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாரானது.

கடந்த மூன்று வருட காலமாக கைதிகளின்

# அகதி முகாம்களில் தொற்று நோய் அபாயம்

## இடம்பெயர்ந்தோர் கவலை

(சுன்னாகம்)

வலி. வடக்கில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் காணப்படுகிறது. இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் கண்நோய், சிரங்கு, இருமல் போன்ற நோய்களால் அவதியுறுகின்றனர். இது தொடர்பாக தொண்டர் நிறுவனங்களிடம் முறையிட்டும் பலனில்லாமல் இருக்கிறதென மேற்படி இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்வோர் தெரிவிக்கின்றனர்.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட மலசலகூடங்கள் செயலிழந்த நிலையிலுள்ளதால், மக்கள் வயல் வெளிகளையும், தோட்டப் பகுதிகளையும் நாடுவதால் தொற்றுநோய் பரவும் அபாயம் அதிகமாகக் காணப்படுகிறது. கந்தரோடைப் பகுதியிலமைந்துள்ள முகாமொன்றில் நாற்றிநான்கு குடும்பங்களுக்கு ஒரேயொரு கிணறு மாத்திரம் குடிநீருக்காகவும், குளிப்பதற்காகவும் பயன்பட்டு வருகிறது.

மேற்படி முகாம்களில் அவசர மருத்துவ உதவிக்கான செயற்பாடுகள் எதனையும் காண முடியாத நிலை உள்ளது. முகாம்களில் பெரும்பாலானவை புறம்போக்கான பள்ளமான காணிகளிலமைந்துள்ளதால் மழை வரும் நேரங்களில் முகாம் வாழ் மக்கள் பாடசாலைகள், கோயில்களை நாடிச் செல்லும் பரிதாப நிலையினையும் காணக்கூடியதாயுள்ளது. (11)

## கைதிகளின் உண்ணாவிரதம் கொழும்புக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த பதின்மூன்றாம் திகதி முதல் உண்ணாநோன்பு இருந்து வரும் சிங்கள யுத்தக் கைதிகளின் உடல் நிலை நாளாந்தம் கவலையளிக்கக் கூடிய வகையில் தளர்ந்து வருகின்றது. எனவே இவர்களின்பிரச்சினை தொடர்பாக அரசுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறு கோரும் கடிதமொன்றை யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் ஆலோசனையின் அடிப்படையில் பேராலய பங்குத் தந்தை எஸ். எச். ஜெபநேசன் எழுதியுள்ளார்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் செயலாளர் பேரருட் திரு. ஒஸ்வால்ட் கோமஸ் அவர்களுக்கு எழுதப்பட்ட இக் கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க செயற்குழு மூலம் கடந்த புதனன்று அனுப்பப்பட்டுள்ளது. (17)

மட்டக்களப்பில்

## இராணுவத்தினர் கூட்டும் கூட்டங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இராணுவ உயர் அதிகாரிகள் கிராமசேவகர் பிரிவுமட்டத்தில் ஆலோசனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளனர் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒருவர் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளனர்.

அத்துடன் குடும்ப உறுப்பினர் தவிர்ந்த வேறு எவரையும் பொலிஸ் அனுமதியின்றி தமது வீடுகளில் தங்கவைக்கக் கூடாதெனவும் பொலிஸார் இப்பகுதி மக்களுக்கு உத்தர விட்டுள்ளனர்.

## கரன்சி நோட்டுகள் இருப்பதே கடிதம் உடைக்க காரணமாம்

### யாழ். தபால் திணைக்கள அதிகாரி

(யாழ்ப்பாணம்)

'வெளி நாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்களுக்கு எழுதுங்கள் இனிமேல் கரன்சி நோட்டுக்களை கடிதத்தினுள் வைத்து அனுப்ப வேண்டாமென்று' இவ்வாறு யாழ். தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளி நாடுகளில் இருந்து கடிதத்தினுள் கரன்சி நோட்டுக்களை வைத்து அனுப்பி வந்ததாலேயே கரன்சி நோட்டுகளை எடுக்கும் நோக்குடன் கடிதம் உடைத்தல் தொடர்கின்றது. எனவே அதைவைத்து அனுப்பாமலே விட்டுவிட்டால் எவ்வளவு காலத்துக்குத் தான் கடிதங்களை உடைத்து பார்க்க முடியும். முன்புபோல் கரன்சிநோட்டுக்கள் இப்போது வெளி நாடுகளிலிருந்து கடிதத்தினுள் வைத்து அனுப்பாது விட்டாலும் ஒரு சில கடிதங்களுள் கூட அனுப்பாமல் விடும்வரை கடிதம் உடைக்கப்படுவது தொடர்ந்து கொண்டே இருக்கும் என அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கடற்படை தாக்குதலில் மீனவர் படகுகள் சேதம்

சற்கோட்டைக் கடற்பரப் ... றது. கடலில் மீன்பிடி...

### சங்கீத ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரிவைச்சேர்ந்த சங்கீத ஆசிரியர்களுக்கானவிசேட கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் பண்டத்தரிப்புக் கோட்ட சங்கீத ஆசிரிய ஆலோசகர் சங்கீத வித்துவான் திரு வீ.கே. நடராஜா தலைமையில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் விசேட கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கீத ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### மலேரியா பரவுகிறது

(நெல்லியடி)

புலோலி தெற்கு சாரையடிப் பகுதியில் தீவிரமாகமலேரியாநோய் பரவியுள்ளது. இங்கு ஒரு வீட்டில் 5பேர்கள் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (30)

### புதிய முத்திரை வழங்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

## கொள்ளையர் தலைவரான கான்ஸ்டபிள் கைது

[கொழும்பு]

பல கொள்ளைகளை நடத்திய கோஷ்டியொன்றின் தலைவாரன பொலிஸ் ரிசேவ் கான்ஸ்டபிள் ஒருவர் கடந்த வாரம் கொஸ்கமவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு முன்ரி 56 ரக துப்பாக்கியுடனும் பல சுற்று ரவைகளுடனும் பூண்டுலோயா பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்ற இந்த நபர் கிரிந்திவெல, அவிசாவளைப்பகுதிகளில் இடம் பெற்ற பல கொள்ளைகளுக்குப் பொறுப்பாக இருந்துள்ளார்.

அவிசாவளையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம்மிருந்து 10 இலட்சம் ரூபாவை கப்பமாக இக்கும்பல் கோரியுள்ளது. இது பற்றிய தகவலை மேற்படி வர்த்தகர் பொலிசாருக்கு கொடுத்ததை அடுத்து இந்த நால்வர் அடங்கிய குழு கைது செய்யப்பட்டது.

கிரிந்திவெல பள்ளேகமவிலுள்ள மறைவிடமொன்றிலிருந்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதை தொடர்ந்து இவர்கள் பயன்படுத்திய இரு மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிரிந்திவெலயில் 58 ஆயிரம் ரூபாவும் 89 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் இக்கும்பலினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

### இல்ல விளையாட்டு

ஆடிய பாதவீதி நல்லூர் முத்தமிழ் பாலர் பாடசாலையின் இல்ல விளையாட்டு விழா இன்று 20ஆம் திகதி பிற்பகல் செங்குந்தா இந்து கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக திரு. சி. வேலாயுதம் கலந்து கொள்வார்.

### வினாடி வினாப் போட்டி

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான விவசாய வினாடிவினாப் போட்டி 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் பண்டத்தரிப்புக் கல்விக்கோட்ட சேவைக்கால ஆலோசகர் திரு. சி. கயிலைமான் அவர்கள் தலைமையில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் பாடசாலைகள் இத் தினத்தன்று மாணவர்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

## கட்சி உறுப்பினர் விரும்பின் பதவி விலகத் தயார்

### சிறிமாவோ அறிவிப்பு

தமது கட்சி உறுப்பினர்கள் விரும்பினால் தனது கட்சித் தலைவர் பதவியை விட்டு விலகத் தயார் என எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். தலைமைப் பதவி தொடர்பாக அவரது பிள்ளைகள் அனுராவும் சந்திரிகாவும் மோதிக் கொள்வதாக கூறப்படுவது குறித்து கருத்துத் தெரிவித்த அவர் தமது பிள்ளைகளுக்கு எதிராகத் தாம் எதையும் செய்யப் போவதில்லை என்றார்.

நான் கட்சியின் தலைமைப் பதவியில் இருக்கும் வரையில் தலைமைப் பதவி தொடர்பாக எந்த மோதலும் இடம் பெற மாட்டாது. கட்சியில் உள்ள அனைவரும் எனது தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளனர். என்னை வெளியேற்ற அனுராவோ, சந்திரிகாவோ வேறுஎவருமோ முயற்சிக்கவில்லை. நான் தகுதியற்றவள் என உறுப்பினர்கள் கண்டால் நான் வெளியேறத் தயாராக உள்ளேன் என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

## நினைவுப் பேருரை

பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களின் ஒன்பதாவது நினைவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் புதன்கிழமையன்று கைலாசபதி கலையரங்கில் நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது. புவியியற்துறைத் தலைவர் செ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்வைபவத்தில் "1970க்குப் பின்னர் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள், எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும்" என்னும் தலையங்கத்தின்கீழ்கல்வியியற்துறைத் தலைவர் வ. ஆறுமுகம் பேருரை வழங்கவுள்ளார்.

## புலிகளுடன் தொடர்பு இல்லை என்கிறது ஜே. வி. பி.

(கொழும்பு)

ருந்து பல இடங்களுக்கும்

மத்தியிலும் கொழும்பு சென்று எமது சகோதரர்களின் விடுதலை தொடர்பாக அரசியல்வாதிகளைச் சந்திக்க முற்பட்டால் அவர்கள் கதவுகள் மூடப்படுகின்றன.''

இதுபோன்று தமது பல்வேறு உள்ளக் குமுறல்களை நேற்று முன்தினம் யாழ். வந்து சேர்ந்த புலிகளின் காவலிலுள்ள யுத்தக் கைதிகளின் பெற்றோர் / உறவினர்கள் வெளியிட்டனர். தாம் மூன்று வருடமாக தமது பிள்ளைகளின் / உறவினர்களின் விடுதலைக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளை அரசாங்கமும், அரசியல்வாதிகளும் பாராமுகமாக இருந்ததையிட்டு கைதிகளின் சகல உறவினர்களும் குமுறும் நெஞ்சத்துடன் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் திடீரென சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் ஆணை பெற்ற தூதுவராக புனர்வாழ்வு ஆளுநர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா புலிகளுடன் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் வரவுள்ளதான அறிவிப்பு வெளியானது. அதுவும், கைதிகளின் பெற்றோர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போதே, மிகக் குறுகியகால அறிவிப்பில் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாரானது.

கடந்த மூன்று வருட காலமாக கைதிகளின் உற்றார், உறவினர்கள் எவ்வளவோ மன்றாட்டமாகக் கேட்டபோதும், அது குறித்து அக்கறை காட்டாத அரசாங்கம் திடீரென இறங்கி வந்துள்ளமையானது கைதிகளின் நிலை கவலைக்கிடமாக மாறி வருவதினாலோ அன்றி பெற்றோர், உறவினர்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தோ அல்ல. கைதிகளின் உண்ணாவிரதம் சிறிலங்கா அரசியலில் எதிரொலிக்கத் தொடங்கப் போகிறது என்ற அச்சத்தினாலேயே ஆகும்.

கைதிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்த பின்னர் அதனைத் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்து வந்த அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்களும், பேரினவாதப் பத்திரிகைகளும் இனியும் இவ்விடயம் குறித்து மௌனம் சாதிக்க முடியாது என்ற நிலையிலேயே கைதிகள் குறித்து புலிகளுடன் பேசுவதற்குத் தயாராகியுள்ளனர். அதாவது, யுத்தக் கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்களின் யாழ். வருகையானது சிறிலங்கா அரசாங்கம் இறங்கி வர வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது.

ஏனெனில், யாழ். வந்த இவர்கள் தென்னிலங்கை திரும்பியதும் கைதிகளின் உண்ணாவிரதம் குறித்தும், அவர்களின் உடல் நிலை குறித்தும், அரசினதும், பேரினவாதிகளினதும் விருப்பத்தையும் மீறி வெளிவருவது தவிர்க்க முடியாததொன்றாகும். கைதிகளின் விடுதலைக்குஎதிர்க்கட்சிகள் பங்களிப்பு செய்யா விட்டாலும், கைதிகளை காக்க அரசாங்கம் தவறி விட்டது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கத் தயங்கப் போவதில்லை. அரசிற்கு விரோதமான பத்திரிகைகளும் இவை குறித்துத் தகவல்களை வெளியிடாமல் இருக்கப் போவதில்லை.

இந்நிலையில், இக்கைதிகளின் விவகாரம் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் அரசாங்கத்தைப் பெரிதும் பாதிப்படையச் செய்யும். இது தற்பொழுது ஸ்திரத்தன்மையற்றிருக்கும் அரசைப் பெரிதும் சிக்கலுக்குள்ளாக்கும். இந்நிலையிலேயே அரசியல் நெருக்கடியைத் தவிர்க்கவும், தமது ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாக்கும் முயற்சியாகவும் பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வந்துள்ளது. அதை விடுத்து தமது பொலிஸார் மீதுள்ள விசுவாசத்தினாலல்ல கைதிகள் மீதுள்ள கரிசனையில்தான் என்றால், அவர்கள்கைதிகளாக இருக்கின்றார்கள் என்று தெரிந்தபோதே அரசு நடவடிக்கையில் இறங்கியிருக்கும்.

# கரன்சி நோட்டுகள் இருப்பதே கடிதம் உடைக்க காரணமாம்

## யாழ். தபால் திணைக்கள அதிகாரி

(யாழ்ப்பாணம்)

'வெளி நாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்களுக்கு எழுதுங்கள் இனிமேல் கரன்சி நோட்டுக்களை கடிதத்தினுள் வைத்து அனுப்ப வேண்டாமென்று' இவ்வாறு யாழ். தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளி நாடுகளில் இருந்து கடிதத்தினுள் கரன்சி நோட்டுக்களை வைத்து அனுப்பி வந்ததாலேயே கரன்சி நோட்டுகளை எடுக்கும் நோக்குடன் கடிதம் உடைத்தல் தொடர்கின்றது.

எனவே அதைவைத்து அனுப்பாமலே விட்டுவிட்டால் எவ்வளவு காலத்துக்குத் தான் கடிதங்களை உடைத்து பார்க்க முடியும். முன்புபோல் கரன்சிநோட்டுக்கள் இப்போது வெளி நாடுகளிலிருந்து கடிதத்தினுள் வைத்து அனுப்பாது விட்டாலும் ஒரு சில கடிதங்களுள் கூட அனுப்பாமல் விடும்வரை கடிதம் உடைக்கப்படுவது தொடர்ந்து கொண்டே இருக்கும் என அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# கடற்படை தாக்குதலில் மீனவர் படகுகள் சேதம்

சற்கோட்டைக் கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் மீனவர்கள் மீது மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கி வேட்டுகளுக்கு ஒரு படகு சேதமானது. மூன்று மீனவர்கள் காயங்களுக்கு இலக்காகினர்.

இச்சம்பவம்நேற்றுமுன்தினம் 5-30 மணியளவில் நடைபெற்றது. கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கிச் சுட்டதில் செ.வீநோதன் என்பவரது படகு சேதமடைந்தது. இப்படகிலிருந்த என்ஜினும் கடலில் வீசப்பட்டு நாசமானது. மற்றும் இவருடன் சென்ற செ. மூத்ததம்பி, யுத்தின் ஆகியோர் தாக்குதலுக்கு இலக்காகினர்.

கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் பண்டத்தரிப்புக் கோட்ட சங்கீத ஆசிரிய ஆலோசகர் சங்கீத வித்துவான் திரு வீ.கே. நடராஜா தலைமையில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் விசேட கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கீத ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## மலேரியா பரவுகிறது

(நெல்லியடி)

புலோலி தெற்கு சாரையடிப் பகுதியில் தீவிரமாகமலேரியாநோய் பரவியுள்ளது. இங்கு ஒரு வீட்டில் 5பேர்கள் மலேரியாவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். (30)

## புதிய முத்திரை வழங்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். பிரதேச சபைச் செயலாளர் பிரிவில் மிக வறுமைக் கோட்டுக்குக் கீழ் இது வரை உணவு முத்திரை பெறாதவர்களுக்கு புதிதாக உணவு முத்திரைகளை வழங்க யாழ். பிரதேச செயலாளர் பணிமனை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (24)

பாக அவரது பிள்ளைகள் அனுராவும் சந்திரிகாவும் மோதிக் கொள்வதாக கூறப்படுவது குறித்து கருத்துத் தெரிவித்த அவர் தமது பிள்ளைகளுக்கு எதிராகத் தாம் எதையும் செய்யப் போவதில்லை என்றார்.

நான் கட்சியின் தலைமைப் பதவியில் இருக்கும் வரையில் தலைமைப் பதவி தொடர்பாக எந்த மோதலும் இடம்பெற மாட்டாது. கட்சியில் உள்ள அனைவரும் எனது தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளனர். என்னை வெளியேற்ற அனுராவோ, சந்திரிகாவோ வேறுஎவருமோ முயற்சிக்கவில்லை. நான் தகுதியற்றவள் என உறுப்பினர்கள்

## பேருரை

பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களின் ஒன்பதாவது நினைவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் புதன்கிழமையன்று கைலாசபதி கலையரங்கில் நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது. புவியியற்துறைத் தலைவர் செ. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற இருக்கும் இவ் வைபவத்தில் ''1970க்குப் பின்னர் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள், எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும்'' என்னும் தலையங்கத்தின்கீழ்கல்வியியற்துறைத் தலைவர் வ. ஆறுமுகம் பேருரை வழங்கவுள்ளார்.

# புலிகளுடன் தொடர்பு இல்லை என்கிறது ஜே. வி. பி.

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களுக்கென தனியான ஒரு நாடு அமைவதை ஜே. வி. பி. இயக்கம் முற்றாக எதிர்க்கின்றது என இவ்வமைப்பின் தலைவர் சோமவன்ச அமரசேகர தெரிவித்துள்ளார். ஒலிப்பதிவு நாடா ஒன்றில் இவரின் கொள்கை விளக்க உரைபதிவு செய்யப்பட்டு லண்டனிலிருந்து பல இடங்களுக்கும் இவரால் அனுப்பப்பட்டு வருகிறது.

இவர் தனதுஉரையில் தமிழீழம் பற்றி குறிப்பிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமது அமைப்பிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஹர்சத் மேத்தாவின் புகார் பாரதீய ஜனதாவின் ஏற்பாடு

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

(டில்லி)

இடைக்காலத் தேர்தல்கள் நடத்துவதற்கு நெருக்கவும், அரசுப்பத்திர ஊழல் தொடர்பான கூட்டுப் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகளுக்கு தடங்கல்கள் ஏற்படுத்தவும் பாரதீய ஜனதாக் கட்சி சதிசெய்கின்றது அதன் ஓர் அங்கமாகவே கடந்த புதனன்று பம்பாயில் பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா நடத்திய பத்திரிகையாளர் மாநாடு இடம் பெற்றது. இவ்வாறு காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

பிரதமர் நரசிம்மராவ் மீது பங்குத்தரகர் ஹர்சத்மேத்தா ஊழல் குற்றச் சாட்டு தெரிவித்திருப்பதைத் தொடர்ந்து அவர் மீது நம்பிக்கை தெரிவிக்கும்முகமாக கூட்டப்பட்ட பிரதேச காங்கிரஸ் மற்றும் மாநில சட்டப் பேரவைக் காங்கிரஸ் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பலரும் பங்குத் தரகர் ஹர்சத் மேத்தாவிற்கும் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் உள்ள தொடர்புகளைச் சுட்டிக் காட்டினர்.

விஷ்வ இந்து பரிசத்தின் தலைவர் அசோக் சிங்ஹல் பம்பாயில் பங்குத் தரகர் ஹர்சத் மேத்தாவைச் சந்தித்துப் பேசியதாகவும் தெரிவித்த காங்கிரஸ் கட்சியினர் ஹர்சத் மேத்தாவின் பிரமாண வாக்கு மூலம் கடந்த பெப்புருவரியிலேயே தயார் செய்யப்பட்ட போதும் தேசிய செயற்குழுக் கூட்டம் நடைபெறுவதை முன்னிட்டு இப்போதுதான் வெளியிடப்படுவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் கடந்த புதனன்று ஹர்சத் மேத்தா பம்பாயில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் பதினைந்து நிமிடங்களிலேயே பெங்களூரில் பாரதீய ஜனதா செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பேராளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது என்பதையும் அவர்கள் எடுத்துக் காட்டினர்.

# பிரதமர் ராவ் பதவி விலக மே.வங்கமுதல்வர்கோரிக்கை

(டில்லி)

பணம் கொடுத்ததாக பங்குதரகர் ஹர்சத் மேத்தா குற்றம் சாட்டியிருப்பதை அடுத்து பிரதமர் நரசிம்மராவ் பதவி விலக வேண்டும் என்று மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு கூறியுள்ளார்.

கல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், பங்குச் சந்தை ஊழல் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் முன்பாக நரசிம்மராவும, ஹர்சத் மேத்தாவும் நேரடியாக அழைக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை ராஜ்ய சபாவில் பேசிய ஜனதா தள்(எஸ்) கட்சியைச் சேர்ந்த யஸ்வந்த் சின்ஹா கூறுகையில்; பிரதமர் ராவ் பதவி விலகி, ஆளும்கட்சியைச் சேர்ந்த ஒருவர் பதவிப் பொறுப்பை இடைக்காலத்திற்கு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தம்மிடம் பணம் பெற்றவர்களின் முழு விபரத்தையும் பங்குத் தரகர் ஹர்சத் மேத்தா வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# ஐ. நா. படை தாக்குதல் முடிவடைந்து விட்டது

## அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு

(வாஷிங்டன்)

சோமாலியாவில் ஜெனரல் ஐடீட் தலைமையிலான போராளிக் குழுவுக்கு எதிராக ஐ. நா. அமைதிப்படை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை நிறைவெய்தி விட்டதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் அறிவித்தார். வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

சோமாலிய தலைநகர் மொகடிஸீயூ மீதும், ஜெனரல் ஐடீட் குழுவின் இலக்குகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது தவிர்க்க முடியாதது எனக் கூறிய கிளின்டன் இந்நடவடிக்கை வெற்றி பெற்று விட்டதாகவும் கூறினார். ஜெனரல் ஐடீட் குழுவே ஐ நா. படையினர் 23 பேர் பலியாவதற்கும், பட்டினியால் மடியும் சோமாலிய மக்களை துன்புறுத்துவதற்கும் காரணம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி குற்றஞ் சாட்டினார்.

ஐ. நா. அமைதிப்படை நடவடிக்கையினால் ஐடீட் குழுவின் இராணுவப் பலம் முறியடிக்கப்பட்டு விட்டதாகவும் ஜெனரல் ஐடீட்டைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும் கிளின்டன் கூறினார். இதேசமயம் ஜெனரல் ஐடீட் கைது செய்வதிலிருந்து தப்ப தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் தமது குழு மீதான ஐ. நா. படைகளின் நடவடிக்கையை ஐடீட் குழுவின் பேச்சாளர் ஒருவர் கடுமையாகக் கண்டித்தார். ஐ. நாவின் இராணுவ நடவடிக்கை தமது குழு குறித்து மக்கள் மத்தியில் அநுதாபத்தை உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

# ஐ. நா. படையினர் ஐவர் பலி

(மொகடிஸீயூ)

சோமாலியத் தலைநகர் மொகடிஸீயூவில் ஐ. நா. படைகள் புதிதாக நடத்திய தாக்குதலில் ஐ நா. படையின் 5 படைவீரர்கள் பலியாகினர். 45 பேர் காயமடைந்தனர். வீதிகளில் இடம்பெற்ற கடும் போரில் இந்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாக ஐ நா. அதிகாரிகள் தெரிவித்தனர். இதேவேளை இம் மோதலில் 60 சோமாலியர்கள் பலியானதாகவும் கூறப்படுகிறது.

# 300 பட்டதாரி மாணவர் காணாமல் போயுள்ளனர்

(கொழும்பு)

பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களில் 300க்கு மேற்பட்டோர் 1989-ம் ஆண்டில் இருந்து இன்றுவரை காணாமல் அல்லது கொலை செய்யப்பட்டிருப்பதாக மாணவர் அமைப்பை சேர்ந்த அனுருத்த கருணாரட்ன தெரிவித்தார்.

றுகுணு பல்கலைக்கழகத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலவச கல்விக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை எதிர்த்து போராடிய பல்கலைக்கழக மாணவர்களுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களை இன்று அரசாங்கம் நினைவுகூர மறந்துவிட்டது எனவேதான் இவ்வாறான கண்காட்சியை நடத்தி இவர்களை நினைவுபடுத்துகின்றோம் என கூறினார்.

## மேஜர் தயாபரன் கிராம மெய்வல்லுனர் போட்டி

மேஜர் தயாபரன் வளர்ச்சித்திட்ட கிராமத்தில் இல்ல மெய்வல்லுனர் போட்டி நேற்று முன்தினம் வவுனியாவில் நடாத்தப்பட்டது. இது புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் பண்டிவிரிச்சான் கொத்தணி அதிபரும், நகர்வட்ட பதில்பொறுப்பாளர் விவேகனும் மங்கள விளக்கினை ஏற்றினர். தொடர்ந்து மேஜர் தயாபரன் வளர்ச்சித்திட்ட பொறுப்பாளர் ஜீவராஜ் தேசியக் கொடியை ஏற்றியதன் பின் மாணவரின் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து விசேட நிகழ்ச்சியாக 30 கழகங்களுக்கிடையிலான 4பேர் கொண்ட கரபந்தாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்ச்சிகட்கு வன்னி மாவட்டஅரசியல்துறைபொறுப்பாளர் து. மனோ அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதன்பின் விருந்தினரின் சிறப்புரையும் பரிசளிப்பும் நடைபெற்றது.

## ஆசிரியர் சேவைக்கால பயிற்சி

வடமராட்சிக் கல்விக் கோட்ட இசை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நாளை காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை வடமராட்சி இந்துமகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது யாழ். கல்வித்திணைக்கள சங்கீத உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு சு. கணபதிப்பிள்ளை இச்சேவைக் காலப் பயிற்சிகளை வழங்குவார். வடமராட்சிக் கல்விக் கோட்டப் பகுதியில் கடமையாற்றும் சகல இசை ஆசிரியர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு ச. செல்லத்துரை அறிவித்துள்ளார். (25)

## பாடசாலை தளபாடம் விநியோகம்

யாழ். கல்வித்திணைக்களத்தினால் கொழும்பில் இருந்து ''குமண'' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி தளபாடங்கள் வடமராட்சி கிழக்கு கொத்தணிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன என யாழ் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படிவிநியோகம்செய்யப்பட்ட தளபாடங்களில் மாணவர்களிற்கான உருக்குக்கதிரை-352, பாலர் மாணவர்களுக்கான உருக்குக்கதிரை-523, மாணவர் உருக்கு மேசை-331, பாலர் மாணவர்களுக்கான உருக்கு மேசை-510 என்பன அடங்குகின்றன.

மேலும் மற்றும்மோர் தொகுதியாழ்.கல்வித்திணைக்களத்திற்கான தளபாடங்கள் ''வாதுவ'' கப்பலில் எடுத்து வரப்படுவதாக யாழ். கல்வித் திணைக்களவட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. [பா]

## குறுக்குவழியில் ஆட்சிக்குவர பாரதீய ஜனதா முயல்கிறது

—பிரதமர் நரசிம்மராவ்

(டில்லி)

குறுக்கு வழியில் அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் சிலர் தனிநபர்கள் மீது களங்

எச். கே. எல். பகத் தலைமையிலான காங்கிரஸ் தொண்

## விவசாய டிப்ளோமா கற்கைநெறி

[யாழ்ப்பாணம்]

வவுனியா விவசாயக் கல்லூரியில் மீண்டும் விவசாய டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிப் பரீட்சை ஆகஸ்ட் 28 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். பரீட்சை விண்ணப்ப முடிவுத்திகதி ஆகஸ்ட் 20ஆம் திகதியாகும். இது தொடர்பான விபரம் ஜூலை மாதம் 25ஆம் திகதி வெளிவரும் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

## பாதுகாப்பு அமைச்சர் சபையில் இல்லை

எதிர்க்கட்சிகள் புகார்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், நிதி அமைச்சரும் பிரசன்னமாக இல்லாததை தான் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதாக சபாநாயகர் எம். எச். முகமெட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாதுகாப்புராஜாங்கஅமைச்சர் இல்லாத இடத்து, பாதுகாப்பு ஆலோசனைக் குழுக் கூட்டத்துக்குத் தலைமைதாங்குவது யார் என்று கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே சபாநாயகர் இதனைத் தெரிவித்தார். பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக எவரும் இதுவரை பதவிப் பிரமாணம் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நிதி அமைச்சரையும் பாராளுமன்றத்தில் காணவில்லை என்று மகாஜன எக்சத் பெரமுன கொழும்பு மாவட்ட எம். பி. தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டார்.

இந்த விடயங்கள் முக்கியமானவை என்றும், இவை குறித்து அரசுடன் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

## சந்திரசேகரனை விடுவிக்க தேசவிமுக்தி கோருகிறது

(கொழும்பு)

மலைநாட்டு மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரனை விடுதலை செய்யுமாறு தேச விமுக்தி ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. சந்திரசேகரன் மத்திய மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, அவர் மாகாணசபை நடவடிக்கையில் பங்குபற்ற உதவும் வகையில், அவரை விடுதலை செய்யுமாறு கோரியே தேச விமுக்தி ஜனதாக்கட்சித் தலைவர் நிகால் பெரேரா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மே 17 மாகாண சபைத் தேர்தலில் சந்திரசேகரன் போட்டியிட்டு வெற்றி ஈட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு வருடங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட சந்திரசேகரன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் இன்றுவரை சிறை வைக்கப்பட்டுள்ளார்.

சந்திரசேகரனைப் பிணையில் விடுமாறு தான் அரசைக் கோரியுள்ளதாக நிகால் பெரேரா தெரிவித்தார்.

## விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபப் பெண் ஒருவர் ஆபத்தான நிலையில் அம்புலன்ஸ் வாகனம் மூலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் பருத்தித்துறையில் நேற்று நிகழ்ந்தது இவ் விபத்தில் எஸ். மகேஸ்வரி (வயது 70) என்பவரே காயமடைந்தவராவார்.

# தமிழர்களை பாதுகாக்கவே புலிகள் போராடுகின்றனர்

## மலேசிய கத்தோலிக்க ஆயர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்மக்களை காக்க முற்படும் ஓர் இயக்கம் என மலேசிய கத்தோலிக்க ஆயர் அன்ரன் செல்வநாயகம் கருத்து தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் சமாதானம் பிறக்க தமிழின மக்களும், சிங்கள இன மக்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வகையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்றிருக்கும் கத்தோலிக்க கிறிஸ்தவ நல்லெண்ணக்குழு கருத்துத் தெரிவித்திருக்கின்றது

மேற்படி சமாதானக்குழுவில் அங்கம் வகித்த மலேசிய ஆயர்மேலும்தெரிவிக்கையில்; இரு சமூகமும் சமாதானத்தை விரும்பினாலும் இருசமூகத்திற்கிடையேயும் ஓர் அவநம்பிக்கை இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜபதுங்காவின் சமாதான முயற்சிகளை புலிகள் வரவேற்பதாக தெரிவித்துள்ளார்

## 2500 கோடி நிதிஉதவி சிறிலங்காவிற்கு கிடைக்கும்

ரணில் தெரிவிப்பு

(பாரிஸ்)

இலங்கைக்கு மேற்கத்தைய நாடுகளும் யப்பானும் சுமார் 2500 கோடிரூபாய் நிதியுதவி வழங்க முன்வந்திருப்பதாக சிறிலங்கா அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்சமயம் பாரிசில் தங்கியிருக்கும் அவர், நிதி உதவி வழங்க மேற்படி நாடுகள் முன்வந்திருப்பதாக தெரிவித்தார்.

# பொலிஸ் கட்டமைப்பில் மாற்றம் செய்ய முடிவு

[கொழும்பு]

பொலிஸ் படையின் கட்டுப்பாட்டு அமைப்பிலும், தலைமையிலும் பல மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த மாற்றங்களை நடைமுறைப் படுத்தவே மேலதிகமாக 12 பிரதிப் பொலிஸ் மா அதிகாரிகளை நியமிக்கத் திறைசேரி அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

பன்னிரண்டு புதிய நியமனங்களுடன் சிரேஷ்ட சுப்பிரின்டென்ட், சுப்பிரின்டென்ட் மற்றும் பிரதி சுப்பிரின்டென்ட் பதவியில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் திணைக்களத்தில் இப்போது 27பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பதவியில் இருக்கிறார்கள். அத்துடன் சுமார் 37,000 பொலிசாரும் 25,00 முதல் 30,000 வரை, ரிஷேர்வ் பொலிசாரும் பாதுகாப்புச் சேவையில் உள்ளார்கள்.

புதிதாக நியமனம்பெற உள்ள பொலிஸ் மா அதிபர்கள் வடக்கு-கிழக்கு எல்லைப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

பொருளாதாரத்

கள் அனுபவித்து வரும் துன்பங்களையும் எடுத்து விளக்கிய புலிகள் நிபந்தனைகளை ஒரு நல்லெண்ண சமிக்கையாக எடுத்து அரசாங்கம் சமாதானத்திற்கும், பேச்சுவார்த்தைக்குமான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

காலைப் பேச்சுக்களில் புலிகள் விதித்த நிபந்தனை பற்றியும் சமாதான முயற்சிக்கான சாத்தியப்பாடு பற்றியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக உடன் கொழும்பிற்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது இருமணி நேரத்தில் பதில் தருவதாக பிரிகேடியர் புலிகளிடம் தெரிவித்தார்.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் மாலை 4.00 மணியளவில் ஆரம்பமாகி ஒரு மணி நேரம் வரையில் இடம் பெற்றது. இப் பேச்சின் போது பொருளாதாரத் தடை நீக்

## தபால் ஏற்றச் சென்றோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால்நிலையத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொடுத்த தகவலை அடுத்து பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்றுக்காலைமுதல் மாலை வரை தபால் பொதிகளை எடுத்து வருவதற்காக காத்திருந்த தபாலக அதிகாரிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு குமண கப்பலில் ஏற்றப்பட்டுள்ள பொருள்கள் பற்றி வந்த பட்டியலில் 300 தபால் பொதிகள் வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேவேளை பருத்தித் துறை துறைமுகத்திற்கு பொருள்களை பொறுப்பேற்று இறக்குவதற்காகச் சென்ற யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதனுக்கு கொடுக்கப்பட்ட பட்டியலில் தபால் பொதிகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதனால் குழப்பமுற்றிருந்த தபால் அதிகாரிகள் மீண்டும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டபோது தங்களுக்கு வந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதால் பருத்தித்துறை துறைமுகத்திற்குச் சென்று தபால் பொதிகளைப் பொறுப்பேற்கும்படி கூறப்பட்டது. இதை யடுத்து பொதிகளை ஏற்றி

யாழ். கல்வித்திணைக்கள சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. கணபதிப்பிள்ளை இச்சேவைக் காலப் பயிற்சிகளை வழங்குவார். வடமராட்சிக் கல்விக் கோட்டப் பகுதியில் கடமையாற்றும் சகல இசை ஆசிரியர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு ச செல்லத்துரை அறிவித்துள்ளார். (25)

மாணவர் உருக்கு மேசை-331, பாலர் மாணவர்களுக்கான உருக்கு மேசை-510 என்பன அடங்குகின்றன.

மேலும் மற்றும்மோர் தொகுதியாழ். கல்வித்திணைக்களத்திற்கான தளபாடங்கள் ''வாதுவ'' கப்பலில் எடுத்து வரப்படுவதாக யாழ். கல்வித் திணைக்களவட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. [பா]

ரனை விடுதலை செய்யுமாறு தேச விமுக்தி ஜனதாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. சந்திரசேகரன் மத்திய மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, அவர் மாகாணசபை நடவடிக்கையில் பங்குபற்ற உதவும் வகையில், அவரை விடுதலை செய்யுமாறு கோரியே தேச விமுக்தி ஜனதாக்கட்சித் தலைவர் நிகால் பெரேரா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மே 17 மாகாண சபைத் தேர்தலில் சந்திரசேகரன் போட்டியிட்டு வெற்றி ஈட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு வருடங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட சந்திரசேகரன் அவசரகாலச் சட்டயில் விடுமாறு தான் அரசைக் கோரியுள்ளதாக நிகால் பெரேரா தெரிவித்தார்.

## குறுக்குவழியில் ஆட்சிக்குவர பாரதீய ஜனதா முயல்கிறது

### —பிரதமர் நரசிம்மராவ்

(டில்லி)

குறுக்கு வழியில் அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் சிலர் தனிநபர்கள் மீது களங்கம் கற்பித்து ஊழல் புகார்களை எழுப்ப முயற்சிப்பதாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

தமக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக தம்மைச் சந்தித்த முன்னாள் அமைச்சர் எச். கே. எல். பகத் தலைமையிலான காங்கிரஸ் தொண்டர்களிடம் பேசிய பிரதமர் ராவ் மேலும் கூறுகையில், பாரதீய ஜனதா போன்ற கட்சிகள் மக்களின் உணர்வுகளுடன் விளையாடுவதாகவும் தெரிவித்தார்.

## மனித உரிமை விவகாரம் இந்தியா-சீனா உடன்பாடு

(ஜெனீவா)

மனித உரிமை பாதுகாப்பு என்ற போர்வையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மேற்கு நாடுகள் கையாளும் பொருளாதார மிரட்டல், உள்விவகாரத்தலையீடு ஆகியவற்றை எதிர்க்க சீனாவும், இந்தியாவும் உடன்பாடு கண்டுள்ளன. ஜெனீவாவில் மனித உரிமைகள் மாநாட்டில்கலந்து கொள்ளச்சென்ற இரு நாட்டு இணை அமைச்சர்கள் மட்டத்தில் இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கலாசார பொருளாதார அமைப்புக்களைக் கவனியாது கையாளப்படும் மிரட்டல்கள் புதிய முறை காலனித்துவத்திற்கான ஒரு நடைமுறையே என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது

இதனிடையே மேற்குநாடுகளின் தராதரத்தைக் கிழக்கு மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் எதிர்பார்க்க முடியாது என மனித உரிமைகள் சர்வதேச மாநாட்டில் ஆசிய நாடுகள் அறிவிக்கும் என்று கூறப்ப கிறது.

விபத்தில்

## பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபப் பெண் ஒருவர் ஆபத்தான நிலையில் அம்புலன்ஸ் வாகனம் மூலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் பருத்தித்துறையில் நேற்று நிகழ்ந்தது இவ் விபத்தில் எஸ். மகேஸ்வரி (வயது 70) என்பவரே காயமடைந்தவராவார்.

தானத்திற்கும், பேச்சுவார்த்தைக்குமானஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

காலைப் பேச்சுக்களில் புலிகள் விதித்த நிபந்தனை பற்றியும் சமாதான முயற்சிக்கான சாத்தியப்பாடு பற்றியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக உடன் கொழும்பிற்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது இருமணி நேரத்தில் பதில் தருவதாக பிரிகேடியர் புலிகளிடம் தெரிவித்தார்.

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் மாலை 4.00 மணியளவில் ஆரம்பமாகி ஒரு மணி நேரம் வரையில் இடம் பெற்றது. இப் பேச்சின் போது பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ளநிலைப்பாடு புலிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

### கைதிகள்

இவர்களின் வருகையை எதிர்பார்த்து இறங்குதுறைப் பகுதியில் சனக்கூட்டமும் காணப்பட்டது சுமார் ஐந்து நிமிட நேரத்தின் பின்னர் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு வாகன அணி முன் செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் யாழ். நோக்கி பயணமானார்கள். (30, 25, யோ)

## ஏமாற்றத்துடன் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால்நிலையத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொடுத்த தகவலை அடுத்து பருத்தித்துறை துறைமுகத்தில்நேற்றுக்காலைமுதல் மாலை வரை தபால் பொதிகளை எடுத்து வருவதற்காக காத்திருந்த தபாலக அதிகாரிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு குமண கப்பலில் ஏற்றப்பட்டுள்ள பொருள்கள் பற்றி வந்த பட்டியலில் 300 தபால் பொதிகள் வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேவேளை பருத்தித்துறை துறை முகத்திற்கு பொருள்களை பொறுப்பேற்று இறக்குவதற்காகச் சென்ற யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதனுக்கு கொடுக்கப்பட்ட பட்டியலில் தபால் பொதிகள் பற்று எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதனால் குழப்பமுற்றிருந்த தபால் அதிகாரிகள் மீண்டும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டபோது தங்களுக்கு வந்த பட்டியலில் குறிபபிடப்பட்டுள்ளதால் பருததித்துறை துறைமுகத்திற்குச் சென்று தபால் பொதிகளைப் பொறுப்பேற்கும்படி கூறப்பட்டது. இதையடுத்து பொதிகளை ஏற்றி வருவதற்காக வாகனத்துடன் சென்ற யாழ். தபாலக அதிகாரிகள் மாலைவரை துறைமுகத்தில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பி வந்துள்ளனர். (சி)

### மேலும்

யுத்தக்கைதிகளை அரசின் தூதுவராக வந்திருக்கும் திரு. வீரசேகரா நேற்று மாலை சென்று பார்வையிட்டதுடன் அவர்களுடன் சிறிது நேரம் உரையாடினார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 19-6-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 9882

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
27-9416, 40-7584, 24-6972, 26-3633, 26-6461, 26-4450, 26-1949, 24-6280, 41-4129, 24-4153

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-2786. 41-9211, 26 3068, 41-9355


## திருமறைக் கலாமன்றம் எடுக்கும்

# இசை விழா

## 20-6-93

## இறுதி நாள் நிகழ்ச்சிகள்

கலைஞர் கௌரவிப்பு.
இசைக் கச்சேரிகள்.
மாதாந்தப் பாடல் அம்சம்
நாதஸ்வர இசை.

மன்ற அரங்கில் மாலை 6-00 மணிக்கு ஆரம்பமாகின்றது


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிர்வாகத்தினர்,
(சி/6868) திருமறைக் கலாமன்றத்தினர்.




## ஸ்ரீதர் யாழ்ப்பாணம் — தெய்வேந்திரா சாவகச்சேரி

## திரையரங்குகளில்




தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30மணி, மாலை 4.00 மணி, 6.00 மணி
(சி-6867)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 02 – 01 – 1942
மறைவு 21 – 05 – 1993

## பா. அந்தோனிப்பிள்ளை

(இராஜேந்திரம்)

பாக்கியநாதன் அந்தோனிப்பிள்ளை (இராஜேந்திரம்) அவர்களின் ஈமக்கிரியை, ஓமந்தை மருதங்குளத்தில் வே. துரைராஜா (அருமை) அவர்களது இல்லத்தில் நடைபெற்றபோது பங்கு பற்றியவர்களுக்கும், அன்னாரின் நாவற்குழி இல்லத்தில் துககத்தில் பங்கு பற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று(20-6-93) அன்னாரின இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:—
அ. ஆனந்தராஜா (மகன்) — பிள்ளைகள்
கேரதீவு றோட்,
நாவற்குழி.
(5186)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.